**உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம் - 2017**

-----------------------------------------------------------------------------------------------------------------

உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 யூன் 29 ஆம் திகதிய 2477 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு, 2009 யூன் 29 ஆந் திகதிய 0129/0130 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க மற்றும் 2013 பெப்ரவரி 13 ஆந் திகதிய 2977 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கைகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

-----------------------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வட மாகாணத்தில் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்கள் மற்றும் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மற்றும் சிலாபம் மாவட்டங்கள் உள்ளடங்கலாக இலங்கையின் வடக்கு மற்றும் வட மேல் உலர் வலயத்திலுள்ள நகர மக்களின் பௌதீக நலன்களை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த கிரயம் ரூபா 19,165 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 163.33 மில்லியனானதுடன் அதில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா 11,809 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 99.78 மில்லியன் கடனாக வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,649 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23.22 மில்லியன் மானியமாக வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. நெதர்லாந்து நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (என்ரீஎவ்) நீர் நிதியளிப்பு பங்குபற்றல் வசதியிலிருந்து ரூபா 228 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2 மில்லியன் மானியமாக ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக வழங்குவதற்கும் உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதியாக இருக்கின்ற ரூபா 4,479 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 38.33 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 நவம்பர் 13 இல் தொடங்கியிருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறானினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2018 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---------------------------------------------------------

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில்

விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தினதும் கடன்வழங்கும் முகவர்களிதும் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(உ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானது பொதுவாக ஏற்றுக்கொள்ளகப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்பிற்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட ரூபா 185.92 மில்லியன் தொகையான வட்டிக் கட்டணங்கள் செயற்திட்டத்தின் நடைபெறும் வேலைகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 133.05 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு பெறுகைகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், நிதிக்கூற்றுக்களில் கட்டப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு மற்றும் நடைபெறும் வேலை அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கடன் உடன்படிக்கையின் 05 ஆம் பட்டோலையின் 18 ஆம் பந்தியின் பிரகாரம், உரிய உள்ளுராட்சி சபைகள் உலர்ந்த கழிவு சேறின் வெளியேறுகையின் வெளியேற்ற மற்றும் நுண்ணுயிரியல் தரம் என்பவற்றிற்குள் சுத்திகரிப்பு வெளியேற்றத்தின் தரம் மற்றும் அளவு, தண்ணீரின் தரம் என்பவற்றின் கண்காணிப்பு ஒழுங்காக நடாத்துவதற்கு பொறுப்புடையது. எவ்வாறாயினும், ஆக்கபூர்வமான முகாமைத்துவ வெளித்தோற்றங்களில் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்ட பகுதிகளில் உள்ளுராட்சி சபைகளால் கண்காணிப்பு பொறிமுறைகளில் சான்றுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை.

### 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

#### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | பயன்படுத்திய நிதிகள் - மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் - 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடிபீ- கடன் | | | | | | | |
| 2477 | 59.78 | 6,820 | 1,364 | 2.73 | 325 | 44.02 | 5,922 |
| 2977 | 40.00 | 4,989 | | 3.35 | 479 | 23.48 | 3,192 |
| ஏடிபீ- மானியம் | | | | | | | |
| 129 | 23.22 | 2,649 | 1,000 | 7.13 | 993 | 23.15 | 3,163 |
| 130 | 2.00 | 228 | | 0.23 | 5 | 1.78 | 210 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரசாங்கம் | 38.33 | 4,479 | 150 | 1.81 | 278 | 23.05 | 3,118 |
| **மொத்தம்** | **163.33** | **19,165** | **2,514** | **15.25** | **2,080** | **115.48** | **15,605** |

நெகிழ்ச்சித்தன்மையான கிரய மதிப்பீடுகள் காரணமாக, ஆரம்ப ஒதுக்கீடுகளை பின்னர் ஐ.அ.டொலர் 113.33 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 163.33 மில்லியன் வரை கடனளிக்கும் முகவரால் அதிகரிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிகளின் பயன்பாடு மீதான மெதுவான முன்னேற்றம் தொடர்ட்ச்சியாக அறிக்கையிடப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்ட நடவடிக்கை தொடங்கிய திகதியிலிருந்து 4 ½ ஆண்டுகள் கடந்த பின்னருத் திருத்தமத் செய்து ஒதுக்கிய நிதிகளில் ஐ.அ.டொலர் 115.48 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டமானது வடக்கு மற்றும் வட மேல் மாகாணங்களில் மற்றும் அத்தகைய பகுதிகளில் பௌதீக நலன்களை முன்னேற்றும் நோக்கில் பல நீர் வழங்கல் மற்றும் சுகாதார நடவடிக்கைகளை அமுலாக்கியது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நிலமேல் மற்றும் நிலததடி நீர் அபிவிருத்தி வேலைகள், புதிய தண்ணீர் சுத்திகரிப்பு பொறிகளின் நிர்மாணம் மற்றும் இருக்கின்ற தண்ணீர் சுத்திகரிப்பு பொறிகளின் புனரமைப்பு, குழாய்களின் வழங்கல் மற்றும் குழாயிடல், சிலாபம், புத்தளம், வவுனியா மற்றும் மன்னார் பகுதிகளில் பிரதான பரிமாற்றம் மற்றும் விநியோக முறைகைளிற்கான பொருத்திகள் மற்றும் வால்புகளின் பொருத்தல் போன்ற செயற்திட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதியில் 40 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. மேலும், காலரீதியான முன்னேற்ற அறிக்கைகள் விலகல்களை இனங்காண்பதற்கு அவற்றின் மீது எடுக்கப்பட்ட உடனடி அளவீடுகளும் இயலக்கூடியவாறு செயல்நடவடிக்கை திட்டத்துடன் உரிய வழியில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 88.20 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2017 ஏப்பிரல் மாதத்தில் வழங்கப்பட்டிருந்த வவுனியா மாவட்டத்தில் பேரு ஆறு நீர்த்தேக்கத்திற்கான கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியிலிருந்து கழிவுகள் வெளியேறும் குழாயின் வழங்குதல் மற்றும் பொருத்துதலின் ஒப்பந்தம் ஒப்பந்தகாரரின் நிதிப் பிரச்சனைகள் காரணமான 2017 திசெம்பர் 31 இல் 40 சதவீத மெதுவான முன்னேற்றக் காடடியிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்த காலப்பகுதி 2018 ஏப்ரல் 20 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சிலாபம் மற்றும் புத்தளத்தில் பிரதான தண்ணீர் பரிமாற்றம் மற்றும் விநியோக முறைமை என்பவற்றிற்கான 218,000 மீற்றர்கள் குழாய்கள் வழங்குதல் மற்றும் குழாயிடல் மற்றும் வால்புகள் உபபாகங்கள் மற்றும் பொருத்துதல் என்பவற்றிற்கான ஒப்பந்தம் ரூபா 1,160.58 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2014 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 பெப்ரவரியில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 மே 31 வரையும் 210,630 மீற்றர்கள் குழாய்கள் மாத்திரம் குழாயிடப்பட்டிருந்தது. ஒப்பந்தத்திற்கான பொறியியலாளர் மதிப்பீடு சரியான அளவில் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இதன்விளைவால் மேலதிக வேலைகளில் ஒப்பந்தகாரரால் ரூபா 181.12 மில்லியன் பெறுமதியான விலை வேறுபாடுகள் மீதான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அதேநேரம் 2017 திசெம்பர் 31 வரை 14 விடயங்களில் ரூபா 126.20 மில்லியன் தொகையான சேமிப்புகள் செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மன்னாரில் தண்ணீர் சேகரிப்பு கட்டமைப்பு நிர்மாணத்தில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரருக்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 39.16 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்த உடன்படிக்கையின் 6பீ2.14.2 ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு ஒப்பந்தகாரரால் முக்கியமான உதிரிப் பாகங்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த வவுனியான, சிலாபம் மற்றும் புத்தளத்தில் குழாய்கள் வழங்குதல் மற்றும் குழாயிடல் மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு நிர்மாணம், மன்னாரில் நிலத்தடி தண்ணீர் அபிவிருத்தி மீதான மின்னியல் மற்றும் எந்திரவியல் வேலைகள் முருங்கன் புதிய ஆழ் கிறுகள் மற்றும் இணைந்த கிணறுகளில் நிலத்தடி தண்ணீர் அபிவிருத்தி போன்ற ஒப்பந்தங்களின் காலப்பகுதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு செயற்திட்டத்திலிருந்து கால நீடிப்பு பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்தங்களின் கீழான வேலைகள் உரிய ஒப்பந்தகாரரால் தொடரப்பட்டிருந்தது.

## 3.4. முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத விடயங்கள்

பின்வரும் விடயங்கள் முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் நிறைவேற்றல் முகவர் இந்த விடயங்களை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) 2013 ஏப்ரல் 05 அந்திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றினை அமுலாக்குவதற்கு நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பவற்றால் இணைந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பொருத்தமான பொறிமுறை 2017 திசெம்பர் 31 வரையும் இரண்டு தரப்பினர்களாலும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளாமல் வவுனியாவில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவியுடன் நெற் பயிர்ச் செய்கைக்காக பதியகுளம் மற்றும் கற்குளத்திலுள்ள 03 நீர்ப்பாசன குளங்கள் புதுப்பித்தல் மற்றும் காணிகளின் புதுப்பித்தல் என்பவற்றிற்காக 2014 இல் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைசாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதன்படி ஆஉதவி ஆணையாளர் செயற்பட்டிருக்காததுடன் ஆகவே வேலைகள் தாமதப்பட்டிருந்தது. இதன்வளைவால், செயற்திட்டமானது இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பகளில் முன்னைய ஆண்டுகளில் இழப்பீடாகவும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளிற்காகவும் ரூபா 21.8 மில்லியன் மேலதிகமாக செலுத்தியிருந்தது.

(இ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளரின் கீழ் பதியப்பட வேண்டும். மேலும், கேள்வி உடன்படிக்கை கேள்வி வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளருடன் பதியப்பட வேண்டும். செயற்திட்டத்துடன் ஒப்பந்த உடன்படிக்கையில் கைசாத்திட்ட 32 ஒப்பந்தகாரர்கள் மேற்குறிப்பிட்ட வேண்டுகைகளுடன் இணங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது.

### 3.5. நிதிக்கட்டுப்பாடு மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்காததுடன் 2016 யூன் 10 ஆந்திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு உள்ளக கணக்காய்வாளரொருவர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6. முரணான கொடுக்கல் வாங்கல்கள்

செயற்திட்டமானது வடக்கு மற்றும் வட மேல் மாகாணத்திலுள்ள பிரதேச ஆதார நிலையங்களின் பாவனைக்காக கடனளிக்கு முகவரின் அனுமதியின் கீழ் ரூபா 16.95 மில்லியன் கிரயத்தில் 02 மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு 2017 மே 19 இல் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும், உரிய மோட்டார் வாகனங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளுடன் அமுலாக்குவதுடன் தொடர்புபட்டிருக்காத தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தென் பிராந்திய அலுவலகங்களிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

### 3.7. சர்ச்சைக்குரிய தண்மையான கொடுக்கல் வாங்கல்கள்

கடனளிக்கும் முகவர் மற்றும் செயற்திட்டப் பணிப்பாளரின் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் சிலாபம் மற்றும் புத்தளம் பகுதிகளின் நிலத்து நீர் அபிவிருத்தி வேலைகளுடன் இணைந்த சிவில், மின்னியல் மற்றும் இயந்திரவியல் வேலைகள் போன்றவற்றின் மீதான ஒப்பந்தத்தில் செயற்திட்டத்தால் ஈடுபடுத்தப்பட்ட 14 உள்ளூர் ஆலோசனையாளர்களிற்காக ரூபா 1.35 மில்லியன் தொகையான வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது.